ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2203/5 - 2020 නොවැම්බර් මස 23 වැනි සඳුදා - 2020.11.23

*2203/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் - 2008 (திருத்தம்)***

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் உப பிரிவு 8ஏ இன் அடிப்படையில் அவ்வப்போது சட்ட திருத்தங்களுக்கு உள்ளாகும் விடயங்கள் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இதனூடாக அறிவிப்பு வழங்கப்படுகின்றது. நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு வசதி அமைச்சரான மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் உப பிரிவு 8ஊ இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் - 2008 (திருத்தம்) இல் உட்சேர்க்கப்படவுள்ள பிரேரிக்கப்பட்டுள்ள திருத்த மீளாய்விற்கு அனுமதி அளித்துள்ளேன் என்பதை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் உப பிரிவு 8ஏ இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் - 2008 (திருத்தம்) இன் 5 ஆவது பிரிவுக்கு பொருந்தக்கூடிய பின்வரும் திருத்தங்களை நான் இதன் மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் 4.5 மற்றும் 5 (இதன் பிற்பாடு கொழும்பு அபிவிருத்தித் திட்டத்தின் முதன்மை நகரம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) என குறிப்பிடப்படும் இதன் மூலம் பின்வரும் விதிகளை மாற்றுவதன் மூலம் மேலும் திருத்தப்படுகிறது.*

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் - 2008 (திருத்தம்) இன் பிரிவு 5 இற்கான திருத்தம்.

1. கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் பிரிவு 5 (கொழும்பு அபிவிருத்தித் திட்டத்தின் முதன்மை நகரம் - 1999 மற்றும் 2008 (திருத்தம்) என குறிப்பிடப்படுகின்றது) இதன் மூலம் பின்வரும் விதிகளை மாற்றுவதன் மூலம் மேலும் திருத்தப்படுகிறது.

   i. இதன் மூலமாக இப்பகுதியின் வலய மண்டல பகுதிகளான வடக்கே : அமையப்பெற்றுள்ள புளோவர் டெரஸ் மற்றும் வலுகராம பாதையையும் ; கிழக்கே : சமரதுங்க முனிதாச மாவத்தையின் மேற்கு பக்கத்தை நோக்கியவாறு அமையப்பெற்ற முதலாம் காணித் தொகுதி வரையிலும்; தெற்கே : குயின்ஸ் வீதி மற்றும் ரீட் அவன்யு இன் மேற்கு பக்கத்தை நோக்கியவாறு

அமையப்பெற்ற முதலாம் காணித் தொகுதி வரையிலும் மற்றும் மேற்கே : 27 ஆவது ஒழுங்கை, 37 ஆவது ஒழுங்கை மற்றும் ஆர். ஏ. டி மெல் மாவத்தையின் கிழக்கு பக்கத்தை நோக்கியவாறு அமையப்பெற்ற முதலாம் காணித் தொகுதி வரையிலும் எல்லைகளாகக் கொண்டுள்ள பகுதியை "விசேட முதன்மை குடியிருப்பு வலயம்" என்கிற வகைப்பாட்டிலிருந்து "கலப்பு பயன்பாட்டு அபிவிருத்தி வலயம்" என்கிற வலயமண்டல பகுதியாக மாற்றப்படுகின்றது.

ii. வடக்கே : லொரீஸ் வீதியையும் ; கிழக்கே : ஹவ்லோக் வீதியின் மேற்கு பக்கத்தை நோக்கியவாறு அமையப்பெற்ற முதலாம் காணி தொகுதி வரையிலும் ; தெற்கே : கிருலப்பனை கால்வாய் வரைக்கும் மற்றும் மேற்கே : ஆர். ஏ. டி மெல் மாவத்தை மற்றும் லேயாட்ஸ் வீதியின் கிழக்கு பக்கத்தை நோக்கியவாறு அமையப்பெற்ற முதலாம் காணித் தொகுதி வரையிலும் எல்லைகளை கொண்டுள்ள பகுதியை "விசேட முதன்மை குடியிருப்பு வலயம்" என்கிற வகைப்பாட்டிலிருந்து "கலப்பு பயன்பாட்டு அபிவிருத்தி வலயம்" என்கிற வலயமண்டல பகுதியாக மாற்றப்படுகின்றது.

iii. வடக்கே : லொரீஸ் வீதி மற்றும் பௌத்தாலோக மாவத்தையையும் ; கிழக்கே மற்றும் மேற்கே : ஹவ்லோக் வீதியின் இரு பக்கத்தை நோக்கியவாறு அமையப்பெற்ற முதலாம் காணி தொகுதி வரையிலும் ; தெற்கே : கிருலப்பனை கால்வாய் வரையிலும் எல்லைகளாகக் கொண்டுள்ள பகுதியை "விசேட முதன்மை குடியிருப்பு வலயம்" என்கிற வகைப்பாட்டிலிருந்து "கலப்பு பயன்பாட்டு அபிவிருத்தி வலயம்" என்கிற வலயமண்டல பகுதியாக மாற்றப்படுகின்றது.

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்) இன் பிரிவு 4.5 இற்கான திருத்தம்.

2. கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் பிரிவு 4.5 (இதன் பிற்பாடு கொழும்பு அபிவிருத்தித் திட்டத்தின் முதன்மை நகரம் -1999 மற்றும் 2008 (திருத்தம்) என குறிப்பிடப்படும்) இதன் மூலம் பின்வரும் விதிகளை உள்ளடக்கி பிரிவு 6.5 (எ) என்றவாறு மேலும் திருத்தப்படுகிறது.

i. மேலே குறித்துரைக்கப்பட்ட திருத்தப்பட்ட வலயங்களாக 1(i) மற்றும் 1 (ii) க்கான மாடிகளின் எண்ணிக்க பின்வருமாறு தீர்மானிக்கப்படுறது.

a. 1000 சதுர மீற்றருக்கும் குறைவான விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள காணிகளுக்கு கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் (திருத்தம்) - 2008 இன் விசேட முதன்மை குடியிருப்பு வலயத்தின்படியான எண்ணிக்கை;

b. 1000 சதுர மீற்றருக்கும் அதிகமான அல்லது சமமான விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள காணிகளுக்கு கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் (திருத்தம்) - 2008 இன் C1 படிவம் அல்லது மாற்றியமைக்கப்பட்ட C2 இன் பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

ii. மேலே குறித்துரைக்கப்பட்ட திருத்தப்பட்ட வலயங்களுக்கு அதாவது 1(i) மற்றும் 1 (ii) க்கு மட்டுமே காணி உப பிரிவிடுகைக்கான குறைந்தபட்ச காணி விஸ்தீரணமானது கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் (திருத்தம்) - 2008 இன் விசேட முதன்மை குடியிருப்பு வலயத்தின்படி நிர்ணயிக்கப்படும்.

**மஹிந்த ராஜபக்ஷ, பா.உ.,**
நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு வசதி அமைச்சர்.

கொழும்பு,
2020, நவெம்பர் 12.

12-20

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.